# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள். 07.07.2026**

**முன்னிலை**

**திரு. அபய் குமார் சிங் இ.கா.ப (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 11829/F/2023**

திரு.M.முருகேசன் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்
கழகம் (கோவை) லிட்., .. பொது அதிகார அமைப்பு
மேட்டுபாளையம் ரோடு,
கோவை மாவட்டம்

**ஆணை**

இவ்வழக்கின் மீதான நேரடி விசாரணை 25.05.2026 அன்று மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை தொடர்ந்து, பொது அதிகார அமைப்பின் சார்பாக தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.A.அரவிந்குமார், உதவி மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) லிட்., ஈரோடு மண்டலம் அவர்கள் இன்று (07.07.2026) ஆணையத்தின் முன்பு நேரில் ஆஜராகி, அப்போதைய பொதுத் தகவல் அலுவலர், திரு.சி.வைரவசுந்தரம், துணை மேலாளர் (நிர்வாகம்), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், ஈரோடு மண்டலம் அவர்களின் எழுத்து மூல விளக்கத்தினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

2. மேலும், மனுதாரர் கோரிய தகவல்களை பா.எண்.1583/கணினிதஅஉச/தஅபோக/கோ/ஈம/2026, 20.06.2026 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டதாக தெரிவித்து அத்தகவலின் நகல் மற்றும் மனுதாரர் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை

அட்டையின் நகல் ஆகியவற்றை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இவ்வாணையம் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ள தகவல்களை உறுதி செய்கிறது. மேலும், அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் ***அவர்களால் அளிக்கப்பட்ட விளக்கத்தினை இவ்வாணையம் ஏற்கவில்லை.*** எனவே அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்களுக்கு ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினை பிறப்பிக்கின்றது:-

- ***மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் மனுதாரர் கோரியுள்ள தகவல்களுக்கு உரிய காலத்தில் தகவல் வழங்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.சி.வைரவசுந்தரம், துணை மேலாளர் (நிர்வாகம்), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், ஈரோடு மண்டலம் அவர்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(8)(b)-ன் கீழ் ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) இழப்பீட்டு தொகையை மனுதாரருக்கு வழங்க இவ்வாணையம் உத்தரவிடுகிறது. மேற்கண்ட இழப்பீட்டு தொகையை மனுதாரர் பெற்றுக் கொண்டதற்கான சான்றின் நகலினை 06.08.2026 அன்று ஆணையத்திற்கு நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது.***

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**வழக்கு எண். SA 11829/F/2023**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

1. பொதுத் தகவல் அலுவலர் /
   தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்
   கழகம் (கோவை) லிட்.,
   மேட்டுபாளையம் ரோடு,
   கோவை மாவட்டம்
2. **திரு.சி.வைரவசுந்தரம்,**
   **அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் /**
   தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்
   கழகம் கோவை லிட்.,
   கோவை மாவட்டம்.

**(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வழியாக)**

<u>**மனுதாரர்**</u>

திரு.M.முருகேசன்,
க.எண்.21 நைனாம்பாளையம் ரோடு,
பழைய வள்ளியாம்பாளையம்,
கலிங்கியம் (அ), கோபி (வட்டம்),
ஈரோடு - 638 453.

நகல்

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை - 35 (For follow up)

Copy to file: RVPA